## 29.21 மக்கள் நலப்பணியாளர்களுக்கு மதிப்பூதியம் உயர்த்துதல் மற்றும் பயணப்படி அளித்தல்

ஊரக வளர்ச்சி (மதி1) துறை

அரசாணை (நிலை) எண்.79 நாள் : 26.04.1999

படிக்க :

1. அரசு ஆணை (நிலை) எண்.50, ஊரக வளர்ச்சி (மதி1) துறை, நாள் 24.02.1997
2. அரசு ஆணை (நிலை) எண்.277, ஊரக வளர்ச்சி (மதி1) துறை, நாள் 10.09.1997
3. அரசு ஆணை (நிலை) எண்.45, ஊரக வளர்ச்சி (மதி1) துறை, நாள் 09.03.1999

**ஆணை**

17–03–1999– அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் சட்டமன்றப் பேரவைக்கு சமர்ப்பிக்கப்பட்ட 1999–2000 ஆண்டிற்கான நிதி நிலை அறிக்கையில் பத்தி 24–ல் கீழ்க்கண்டவாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

24– மக்கள் நலப் பணியாளர்கள் தற்போது மதிப்பூதியமாக மாதம் ரூ.500/– பெறுகிறார்கள். அரசின் பல திட்டங்களை மக்களுக்கு விளக்கி அதன் பயன்களை மக்கள் துய்த்திட துணை நிற்கும் அவர்தம் நற்பணியைக் கவனத்தில் கொண்டு, அவர்கள் மேலும் ஆர்வமுடன் செயல்பட அவர்களின் மாத மதிப்பூதியம் ரூ.750/– ஆக உயர்த்தப்படுகிறது. பயணப்படியாக மாதம் ரூ.50 அளிக்கப்படும்.

2. முன்பத்தி ஒன்றில் குறிப்பிட்டுள்ள அறிவிப்பிற்கிணங்க கீழ்க்கண்டவாறு ஆணை பிறப்பக்கப்படுகிறது.

(i). பார்வை ஒன்றில் குறிப்பிட்டுள்ள அரசாணையில் மக்கள் நலப் பணியாளர்களுக்கு மாதம் ஒன்றுக்கு ரூ.500 (ரூபாய் ஐந்நூறு மட்டும்) மதிப்பூதியமாக வழங்கப்படும் என்று ஆணையிடப்பட்டது. மக்கள் நலப் பணியாளர்களுக்கு மாதம் ஒன்றுக்கு தற்பொழுது ரூ.500/– (ரூபாய் ஐந்நூறு மட்டும்) மதிப்பூதியமாக வழங்கப்படுவது, மாதம் ஒன்றுக்கு ரூ.750/– (ரூபாய் எழுநூற்று ஐம்பது மட்டும்) ஆக வழங்கப்படும்.

(ii). மக்கள் நலப் பணியாளருக்கு பயணப்படியாக மாதம் ரூ.50/– (ரூபாய் ஐம்பது மட்டும்) அளிக்கப்படும்.

(iii). இந்த பயணப்படியை மக்கள் நலப் பணியாளர்களுக்கு வழங்குவதற்கு வட்டார வளர்ச்சி அலுவலர்களுக்கு அதிகாரம் அளிக்கப்படுகிறது.

(iv). இந்த மதிப்பூதியம் மற்றும் பயணப்படி செலவினம் கீழே குறிப்பிட்டுள்ள கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்படும்.

“2515–00 ஏனைய ஊரக வளர்ச்சித் திட்டங்கள் 800 – ஏனைய செலவு ஒன்பதாம் ஐந்தாண்டுத் திட்டப் பணிகள் II மாநிலத் திட்டம் JQ படித்த வேலை வாய்ப்பற்ற இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பளிக்கும் ஊராட்சி ஒன்றிய மக்கள் நலப் பணியாளர்கள் வேலைவாய்ப்புத் திட்டம் – 09. உதவி மானியங்கள் (து.தொ.கு.2515–00–800 x 0909)“.

3. மக்கள் நலப் பணியாளர்களுக்கு மதிப்பூதியத்தை உயர்த்தியதனாலும் பயணப்படி அனுமதிக்கப்பட்டதாலும், 1999–2000 ஆம் ஆண்டிற்கு ரூ.1295–14, இலட்சம் தேவைப்படுகிறது. அவ்வாறு தேவைப்படும் செலவினத்திற்குள் ரூ.809.46 இலட்சத்தை 33 தொழில் முறை சிறப்பு பணிகளுக்கு தொகை கொடுத்தல் என்று நுணுக்கத் தலைப்பிற்கு மறு நிதி ஒதுக்கம் மூலம் திருத்திய மதிப்பீடு மற்றும் இறுதி திருத்திய மதிப்பீட்டில் 1999–2000 ஆம் ஆண்டில் நிதியொதுக்கம் செய்யப்படும். மீதி தேவைப்படும் அதிகப்படியான ரூ.485.68 இலட்சித்திற்கான செலவினம் புது துணைப்பணி குறித்ததாகும். சட்டமன்றத்தில் ஒப்புதல் கிடைக்கும் வரை எதிர்பாரா செலவு நிதியிலிருந்து முன்பணம் பெறுவதன் மூலம் இச்செலவு செய்யப்படும். 1999–2000 ஆம் ஆண்டில் செலவிட கருதியுள்ள தொகைக்கு எதிர்பாரா செலவு நிதியிலிருந்து முன்பணம் பெற ஊரக வளர்ச்சி இயக்குநர் உரிய படிவத்தில் விண்ணப்பிக்க வேண்டும். இத்துடன் ஒரு விளக்கம் குறிப்பு, இத்திட்டத்திற்காக ஆகும் மொத்த செலவு, நடைமுறைப்படுத்தப்படும். ஆண்டில் ஆகும் செலவுத் தொகை எதிர்பாரா நிதியிலிருந்து பெறப்படும் முன்பணத் தொகை மற்றும் இத்திட்டத்திற்கான சிறு விவரக் குறிப்பினையும் சேர்த்து சட்டமன்றப் பேரவையில் ஒப்புதலைப் பெறும் பொருட்டு 1999–2000 ஆம் ஆண்டிற்கான துணை மானியக் கோரிக்கையில் சேர்ப்பதற்காக நிதி (வரவு– செலவு பொது 1) துறைக்கு அனுப்பி வைக்கும்படி ஊரக வளர்ச்சி இயக்குநர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

4. முன்பத்தி இரண்டில் வெளியிடப்பட்டுள்ள ஆணைகள் 01.04.1999 முதல் அமல்படுத்தப்பட்டு 1999–2000 நிதி ஆண்டு வரை செயல்படுத்தப்படும்.

5. இந்த ஆணை நிதித்துறையின் அ.சா.எண்239/JS(SKS)/99, நாள் 13.04.1999–ன் ஒப்புதலுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

**இரேமஷ் சந்திர பண்டா**

அரசு செயலாளர்